# SAI BANKING ACADEMY
# TNPSC GROUP - 4 (GENERAL TAMIL)

1. சேக்கிழாரின் இயற்பெயர் எது?
a) அருண்மொழிதேவர் b) அருணகிரிநாதர் c) உத்தம சோழபல்லவன் d) அப்பூதியடிகள்

2. "உலகெல்லாம்" என்ற இறைவன் அடியெடுத்து கொடுக்க பாடப்பட்ட நூல் எது?
a) திருத்தொண்டர் தொகை b) திருத்தொண்டர் புராணம் c) திருத்தொண்டர் திருவந்தாதி
d) திருவிளையாடற் புராணம்

3. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் பெரிய புராணம் என்றவர் யார்?
a) மு. வரதராசனார் b) மீனாட்சி சுந்தரம் பிள்ளை c) திரு.வி.க d) உமாபதி சிவாச்சாரியார்

4. அநபாய சோழனிடம் அமைச்சராக இருந்தவர் யார்?
a) மாணிக்கவாசகர் b) கம்பர் c) தாயுமானவர் d) சேக்கிழார்

5. களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களை நீக்கியவர் யார்?
a) திருநாவுக்கரசர் b) திருஞானசம்பந்தர் c) அப்பூதியடிகள் d) சேக்கிழார்

6. "<u>வாகீசர்</u>" என்று அழைக்கப்படுபவர் யார்?
a) திருஞானசம்பந்தர் b) திருநாவுக்கரசர் c) மாணிக்கவாசகர் d) சுந்தரர்

7. 1) ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர்
2) நாலாயிரத்திவ்ய பிரபந்தம் தொகுத்தவர் நாதமுனி.
3) இத்தொகுப்பு "ஆன்ற தமிழ் மறை", "திராவிடசாகரம்" என அழைக்கப்படுகின்றது.
தவறான கூற்று எது? / எவை?
a) எதுவும் இல்லை b) 1,2,3 c) 1 மட்டும் d) 3 மட்டும்

8. கொல்லிக் காவலன், கூடல்நாயகன், கோழிக்கோ என்று அழைக்கப்பட்டவர் யார்?
a) நம்மாழ்வார் b) பெரியாழ்வார் c) குலசேகர ஆழ்வார் d) பொய்கையாழ்வார்

9. "<u>முகுந்தமாலை</u>" என்ற வடமொழி நூலினை எழுதியவர் யார்?
a) திருத்தக்கதேவர் b) வால்மீகி c) காளிதாசர் d) குலசேகர ஆழ்வார்

10. திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து என்றவர் யார்?
a) ராமானந்தர் b) பெரியாழ்வார் c) ராமானுஜர் d) கம்பர்

11. 1) திருவிளையாடற் புராணத்தை எழுதியவர் பரஞ்ஜோதி முனிவர்.
2) இந்நூல் மதுரை, கூடல், திருவாலவாய்க் காண்டங்களாக பகுக்கப்பட்டுள்ளது.
3) 64 படலங்களையும் 3363 ஆசிரியப்பாக்களையும் கொண்ட நூல்.
4) இது ஒரு தழுவல் நூல்.
தவறான கூற்றுகள் எவை?
a) 1 மற்றும் 2 b) 3 மட்டும் c) 1 மற்றும் 3 d) 2 மற்றும் 4

12. தேம்பாவண் நூலின் அமைப்பின் சரியானது எது?

| a) | b) | c) | d) |
|---|---|---|---|
| 3 காண்டங்கள் | 3 காண்டங்கள் | 6 காண்டங்கள் | 6 காண்டங்கள் |
| 36 படலங்கள் | 34 படலங்கள் | 36 படலங்கள் | 34 படலங்கள் |
| 3615 பாடல்கள் | 3315 பாடல்கள் | 3615 பாடல்கள் | 3315 பாடல்கள் |

13. “கிறித்தவ சமயத்தவரின் கலைக்களஞ்சியம்” என போற்றப்படும் நூல்?
a) ஏசு காவியம் b) இரட்சண்ய யாத்திரிகம் c) இரட்சண்ய மனோகரம் d) தேம் பாவணி

14. “முதுமொழிமாலை” என்ற நூலினை எழுதியவர் யார்?
a) குலசேகர ஆழ்வார் b) உமறுபுலவர் c) வீரமாமுனிவர் d) பரஞ்சோதி முனிவர்

15. 1) விலாதத்துக் காண்டம் - பிறப்பியற் காண்டம்
2) நுபுவ்வத்துக் காண்டம் - செலவியற் காண்டம்
3) ஹிஜ்ரத்துக் காண்டம் - செம்பொருட் காண்டம்
இவற்றில் சரியான இணை எது? / எவை?
a) 1, 2, 3 b) 2, 3 c) 1 மட்டும் d) எதுவும் இல்லை

16. “பகுத்தறிவாளர் சங்கம்” தோற்றுவித்தவர் யார்?
a) பெரியார் b) பகுத்தறிவுக் கவிராயர் c) அண்ணா d) காமராசர்

17. “பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாதது” என்றவர் யார்?
a) திரு.வி.க b) பெரியார் c) அண்ணா d) காந்தி

18. “தொண்டு செய்து பழுத்த பழம்” என்று பெரியாரைப் பாராட்டியவர் யார்?
a) பாரதியார் b) சுத்தானந்த பாரதியார் c) பாரதிதாசன் d) ஈராஸ் பாதிரியார்

19. ஈ.வெ.ராமசாமிக்கு ‘பெரியார்’ பட்டம் வழங்கியவர் யார்?
a) அஞ்சலையம்மாள் b) அம்புஜதம்மாள் c) அசலாம்பிகையம்மாள் d) தருமாம்பாள்

20. முத்துராமலிங்கத் தேவரை “தேசியம் காத்த செம்மல்” என்று அழைத்தவர் யார்?
a) திரு.வி.க b) மு.வ c) சுபாஷ் சிந்திர போஸ் d) அண்ணா

21. பொருத்துக:
A) அண்ணா - 1) இந்து புத்த சமய மேதை
B) முத்துராமலிங்கத் தேவர் - 2) சமத்துவக் காவலர்
C) பெருந்தலைவர் காமராசர் - 3) தென்னிந்தியாவின் பெர்னாட்ஷா
D) அம்பேத்கர் - 4) பிரஜாபந்து

| | A | B | C | D | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 2 | 1 | b) | 3 | 1 | 4 | 2 |
| c) | 4 | 3 | 1 | 2 | d) | 3 | 4 | 1 | 2 |

22. 1) முதன் முதலாக காமராசர் சட்டமன்ற உறுப்பினரான ஆண்டு - 1937.
2) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரானது - 1939.
3) பாரத ரத்னா விருது பெற்றது - 1976.
4) பிறந்த தினத்தை கல்வி வளர்ச்சி தினமாக அறிவித்த ஆண்டு 2005.
தவறான கூற்று எது?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) 3 மட்டும் d) 4 மட்டும்

23. “சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி” என்று அழைக்கப்படுபவர் யார்?
a) மகாத்மா காந்தி b) பெரியார் c) அம்பேத்கர் d) காமராசர்

24. 1) சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப்புழுக்கள் அரித்துவிடக் கூடாது.
2) சாதியும் நிறமும் அரசியலுக்குமில்லை, ஆன்மீகத்திற்குமில்லை.
3) கீழ்ச்சாதி, மேல்சாதி வேற்றுமை, தீண்டாமை கொடுமைகள் அகல எல்லாருக்கும் கல்வி தேவை.

4) சாதி இரண்டொழிய வேறில்லை.
இவற்றில் சாதி ஒழிப்பைப் பற்றிய அம்பேத்கரின் கூற்று எது?
a) 4 மட்டும் b) 3 மட்டும் c) 2 மட்டும் d) 1 மட்டும்

25. "ஒரு லட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சமுத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்று கூறியவர் யார்?
a) அம்பேத்கர் b) பெரியார் c) காமராசர் d) காந்தி

26. அம்பேத்கருக்கு "இந்திய மாமணி" விருது வழங்கப்பட்ட ஆண்டு?
a) 1978 b) 1956 c) 1990 d) 1970

27. "ஊர்தல்" என்பதன் பொருள் என்ன?
a) நகருதல் b) வருதல் c) நிற்றல் d) அடர்தல்

28. "ஊரும் பேரும்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
a) மு.வ b) ரா.பி. சேதுப்பிள்ளை c) திரு.வி.க d) உ.வே.சா

29. <u>பொருத்துக</u>:
A) குன்றத்தூர் - 1) நெய்தல்
B) தரங்கம்பாடி - 2) மருதம்
C) கடம்பூர் - 3) குறிஞ்சி
D) நீலாங்கரை - 4) முல்லை

| | A | B | C | D | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 2 | 1 | b) | 3 | 4 | 1 | 2 |
| c) | 4 | 3 | 1 | 2 | d) | 4 | 3 | 2 | 1 |

30. 1) நாயக்கர்கள் தமிழகத்தை 72 பாளையங்களாக பிரித்து ஆட்சி செய்தனர்.
2) ராணிப்பேட்டை, சைதாப்பேட்டை ஆகிய ஊர்களில் முகமதியர்கள் அதிகமாக வாழ்ந்தனர்.
சரியான கூற்று எது? / எவை?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) 1 மற்றும் 2 d) எதுவும் இல்லை

31. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்றவர் யார்?
a) காக்கைப் பாடினியார் b) விளிம்பிநாகனார் c) அம்மூவனார் d) ஔவையார்

32. "கல்தோன்றி மண்தோன்றா காலத்தே" என்று கூறும் நூல் எது?
a) புறநானூறு b) புறப்பொருள் வெண்பாமாலை c) தொல்காப்பியம் d) அகத்தியம்

33. 1) கோவில் கட்டி திருவிழா - சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத்தீவு
2) தமிழ் ஆட்சி மொழி - இலங்கை, சிங்கப்பூர், மலேசியா
3) தமிழர் குடியரசுத் தலைவர் - இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்
4) தமிழர் உள்ளாட்சி தேர்தலில் வெற்றி - சிங்கப்பூர், மொர்சியஸ்
தவறான இணைகள் எவை?
a) 1, 2, 3, 4 b) 1, 2 c) 3, 4 d) எதுவும் இல்லை

34. "<u>அறிவு அற்றம் காக்கும் கருவி</u>" என்று கூறும் நூல் எது?
a) திருவள்ளுவமாலை b) திருவாசகம் c) திருக்குறள் d) திருக்கோவை

35. "வறிது நிலைஇய காயமும்" என்ற புறநானூறு பாடல் வரி உணர்த்தும் அறிவியல் எது?
a) உடல் அமைப்பு b) காற்று இல்லாத வெற்றிடம் c) கோள்களின் இயக்கம் d) மண் வகை

36. 1) அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் - திருவாசகம்
2) வலவன் ஏவா வானூர்தி - புறநானூறு
3) அணுவை சதக் கூறிட்ட கோனினும் உளன் - ஔவையார்
4) உடம்பார் அழ்யின் உயிரார் அழிவர் - திருமூலர்
தவறான இணை எது?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) 3 மட்டும் d) 4 மட்டும்

37. ''ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்'' என்ற சிலப்பதிகாரப் பாடலில் கூறப்படும் அறிவியல் பிரிவு?
a) உருவ ஒற்றுமை b) வானியல் அறிவு c) மருத்துவம் d) கனிமவியல் அறிவு

38. <u>பொருத்துக</u>:
A) திருவாசகம் - 1) ''தீம்பிழி எந்திரம்''
B) கம்பர் - 2) ''புல்லாகிப் பூடாய்''
C) பதிற்றுப்பத்து - 3) ''எந்திரக் கிணறு'' ''எந்திர யானை''
D) பெருங்கதை - 4) ''உடம்பிடைத் தோன்றிற் றொன்றை''

| | A | B | C | D | | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a) | 2 | 4 | 1 | 3 | b) | 2 | 1 | 4 | 3 |
| c) | 4 | 3 | 2 | 1 | d) | 1 | 2 | 3 | 4 |

39. 1) ''செம்புலப் பெயர் நீர் போல'' - குறுந்தொகை
2) ''உறுமிசத் துதவா உவர்நிலம்'' - திருக்குறள்
3) ''பயவாக் களரனையர் கல்லாதவர்'' - புறநானூறு
4) ''மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து'' - திருவாசகம்
தவறான இணை எது? / எவை?
a) 1, 4 b) 2, 3 c) 1, 2, 3 d) 1, 2, 3, 4

40. ''<u>வீரத்தமிழ் மங்கை</u>'' என்று அழைக்கப்பட்டவர் யார்?
a) தில்லையாடி வள்ளியம்மை b) வேலுநாச்சியார் c) ராணி மங்கம்மாள் d) அசலாம்பிகை

41. ''நம்பிக்கை தான் அவரது ஆயுதம்'' என்று தில்லையாடி வள்ளியம்மை பற்றி காந்தியடிகள் எழுதிய இதழ்?
a) நியூ இந்தியா b) இந்தியன் ஒப்பீனியன் c) இந்தியா d) யங் இந்தியா

42. தமிழ்நாடு கோ - ஆப் - டெக்லின் எந்த விற்பனை மையத்திற்கு வள்ளியம்மையின் பெயர் சூட்டப்பட்டது?
a) 600 வது b) 700 வது c) 800 வது d) 500 வது

43. தில்லையாடி வள்ளியம்மைக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்ட ஆண்டு?
a) 2005 b) 2007 c) 2000 d) 1995

44. ''நாட்டையாளும் பொறுப்புக்கு வந்துவிட்டால் அனைவரையும் தம் குழந்தைகள் போல் எண்ணி, அன்பு செலுத்த வேண்டும்'' என்றவர் யார்?
a) நேரு b) காந்தி c) வேலுநாச்சியார் d) ராணி மங்கம்மாள்

45. ''ராணி மங்கம்மாள் சாலை'' எந்த இரு நகரங்களுக்கு இடைப்பட்டது?
a) கன்னியாகுமரி - மதுரை b) கன்னியாகுமரி - நாகை c) மதுரை - திருச்சி
d) மதுரை - தேனி

46. 1) அன்னிபெசன்ட் இந்தியாவிற்கு 1893 ல் வந்தார்.
2) 1907 ல் பிரம்மஜான சபைக்குத் தலைவரானார்.

3) இவர் முதல் காங்கிரஸ் பெண் தலைவர்
4) இவர் ஆரம்பித்த பத்திரிக்கைகள் யங் இந்தியா, காமன்வீல்.
தவறான கூற்று எது?
a) 1 மட்டும் b) 2 மட்டும் c) 3 மட்டும் d) 4 மட்டும்

47. 1) "தமிழகத்தின் அன்னிபெசன்ட்" என்று அறிஞர் அண்ணா முத்துலெட்சுமிரெட்டியை அழைத்தார்.
2) முதல் பெண் மருத்துவர் - முத்துலெட்சுமிரெட்டி
3) 1930 ல் அவ்வை இல்லம் தோற்றுவித்தார்.
இவற்றில் சரியான கூற்று எது? / எவை?
a) 1 மட்டும் b) 1 மற்றும் 3 c) 2 மட்டும் d) 2 மற்றும் 3

48. 1) மேரி கியூரி இங்கிலாந்தைச் சேர்ந்தவர்.
2) 1903 ல் ரேடியத்தின் அணு எடை கண்டறிந்ததற்காக நோபல் பரிசு.
3) 1911 ல் வேதியியல் துறையில் நோபல் பரிசு.
4) மகள் ஐரின் 1935 ல் நோபல் பரிசு பெற்றார்.
தவறான கூற்றுகள் எவை?
a) 1 மற்றும் 2 b) 2 மற்றும் 3 c) 1 மற்றும் 3 d) 2 மற்றும் 4

49. 1) தென்னாட்டின் ஜான்சி ராணி - அஞ்சலையம்மாள்
2) உலகின் எட்டாவது அதிசயம் - கெலன் கெல்லர்
3) காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் - அம்புஜதம்மாள்
4) ஆங்கிரேயரை எதிர்த்த முதல் பெண்மணி - ராணி மங்கம்மாள்
சரியான கூற்றுகள் எவை?
a) 1, 2 மட்டும் b) 3, 4 மட்டும் c) 1, 2, 3 d) 1, 2, 3, 4

50. 1) அசலாம்பிகை அம்மையார் "இக்காலத்து ஔவையார்" என்றவர் திரு.வி.க
2) இவர் ஆத்திச் சூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.
3) ராமலிங்க சுவாமிகள் சரிதம் - 2034 பாடல்கள்.
4) காந்திபுராணம் - 409 பாடல்கள்.
தவறான கூற்றுகள் எவை?
a) 1 மற்றும் 2 b) 3 மற்றும் 4 c) 1 மற்றும் 3 d) 2 மற்றும் 4

# Tamil Test - 5 Answer Sheet

1. a
2. b
3. c
4. d
5. c
6. b
7. a
8. c
9. d
10. c
11. b
12. a
13. d
14. b
15. c
16. a
17. b
18. c
19. d
20. a
21. b
22. d
23. c
24. d
25. a
26. c
27. d
28. b
29. a
30. c
31. d
32. b
33. c
34. c
35. b
36. c
37. d
38. a
39. b
40. a
41. b
42. a
43. c
44. d
45. a
46. d
47. d
48. a
49. c
50. b